செ.வெ.எண்.11 நாள்: 07.05.2019

தூத்துக்குடி மாவட்டம் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் எட்டையாபுரம் பாரதியார் நூற்றறாண்டு நினைவு அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியிலும் 2019-2020ஆம் கல்வியாண்டில் நேரடி இரண்டாமாண்டு, முதலாமாண்டு பட்டயப்படிப்பில் சேர 10-ஆம் மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன - தூத்துக்குடி மாவட்டம் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் தகவல்

---

தூத்துக்குடி மாவட்டம் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் எட்டையாபுரம் பாரதியார் நூற்றறாண்டு நினைவு அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியிலும் 2019-2020ஆம் கல்வியாண்டில் நேரடி இரண்டாமாண்டு, முதலாமாண்டு பட்டயப்படிப்பில் சேர 10-ஆம் மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தூத்துக்குடி மாவட்டம் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி 2019-2020 ஆம் கல்வியாண்டிற்கு நேரடி இரண்டாமாண்டு, முதலாமாண்டு பட்டயப்படிப்பில் சேர 10-ஆம் மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றமாணவ/மாணவியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அமைப்பியல் (CIVIL) இயந்திரவியல் (Mechnical),மின்னியல் மற்றும் மின்னணுவியல் (EEE),மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் (ECE), ஆகிய பாடப்பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படுகிறது.

எட்டையபுரம் பாரதியார் நூற்றறாண்டு நினைவு அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரவியல் (Mechnical),மின்னியல் மற்றும் மின்னணுவியல் (EEE),மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் (ECE),கருவியியல் மற்றும் கட்டுபாட்டுத்துறை(ICE),கணினிப் பொறியியல் (CE),ஆடைத் தொழில் நுட்பவியல் (G.Tech)ஆகிய பாடப்பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படுகிறது.

விண்ணப்பங்களை இக்கல்லூரியிலும் பாரதியார் நூற்றாண்டு அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியிலும் பெற்று பூர்த்தி செய்து நேரடி இரண்டாமாண்டு விண்ணப்பங்களை 10.05.2019 மாலை5.45க்குள்ளும்,முதலாமாண்டு விண்ணப்பங்களை 17.05.2019 மாலை 5.45க்குள்ளும் முதல்வருக்கு சமர்ப்பிக்கவேண்டும். மேலும் தொடர்புக்கு முதல்வர், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி 3-வது மைல் பாளையங்கோட்டை (சாலை) தூத்துக்குடி-628008 என்ற முகவரியிலும், தொலைபேசிஎண்:0461 2311647 எண்ணிலும் தொடர்புகொள்ளலாம் எனவும் எட்டையபுரம் பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி எட்டையபுரம், தூத்துக்குடி மாவட்டம் என்ற முகவரியிலும், தொலைபேசிஎண்:04632 271238எண்ணிலும் தொடர்புகொள்ளலாம் என தூத்துக்குடி மாவட்டம் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.